Registered as a News Paper    பக்கங்கள்: 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 10    (26 - 08 - 1991)    திங்கட்கிழமை    ஓசை: 189

## விபுலாநந்தர் நூற்றாண்டு விழா ஒரு முக்கிய வேண்டுகோள்!

உலகிலே பரந்து வாழும் தமிழர்களின் மொழி, கலை, பண்பாட்டம்சங்களை மீட்டெடுத்துத் தந்தவரும், தமிழ் கூறும் நல்லுலகம் அனைத்துமே போற்றும் பெருமைக்குரியவரும், தமிழ் மக்களின் ஒருமைப்பாட்டின் சின்னமுமான முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளாரின் நூற்றாண்டு விழாவை 29-03-91 தொடக்கம் ஓராண்டுக்குத் தமிழீழம் எங்கும் கொண்டாட தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை, பண் (4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் - அதிரடிப் பொலிஸ் அக்கரைப்பற்றில் மோதல்

## பல பொலிஸ் பலி, பலர் படுகாயம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா விசேட அதிரடிப் பொலிஸ் படையினருக்கும் இடையில் நடந்த மோதல் ஒன்றில் பல அதிரடிப் படையினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

இந்த சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றுப் பகுதியில் ரோந்து சென்று கொண்டிருந்த சிறிலங்கா அதிரடிப் படையினர் மீது திடீர் தாக்குதல் ஒன்று புலிகளால் மேற்கொள்ளப்பட்டது

பல மணிநேரம் தொடர்ச்சியாக நடைபெற்ற இம் மோதலில் அதிரடிப்படையினர் பலர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

இம் மோதலை ஊர்ஜிதப் படுத்திய சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் இம் மோதலில் ஒரு விசேட அதிரடிப்படையினர் கொல்லப்பட்டதாகவும் பலர் படுகாயம் அடைந்ததாகவும் தெரிவித்தது- ஆனல் படையினரில் பலர் உயிரிழந்ததாக சுயாதீன செய்திகள் தெரிவிக்கின்றன.

## வீரவணக்கம்

ஆனையிறவில் 13-07-91 அன்று நடைபெற்ற மோதலில் ★ சுரேஷ் (சுப்பிரமணியன் மணிவண்ணன், ஒட்டுமடம், யாழ்ப்பாணம்) என்பவரும். 17 - 07 - 91 அன்று நடைபெற்ற மோதல்களில் ★ பாலச்சந்திரன் (பியதாசா யேசுராஜன், மடுவீதி, மன்னார்), ★ புஷ்பன் (பிரகாசம் றோயல் தோமஸ் நெடுந்திவு) ★ பரணி (முத்துவேல் சாந்தலிங்கம், வேலணை) ஆகியோரும்

கட்டைக்காட்டுப் பகுதியில் 21-07-91 அன்று நடந்த நேரடி மோதலில் ★ யோகன் (கிட்ணர் உதயகுமார், பெரிய புல்லுமலை மட்டக்களப்பு) ★ கபூர் (தங்கவேல், நடேசன் பாரதிபுரம், கிளிநொச்சி) ★ அர்ஜுன் (பொன்னுத்துரை மோகன், நாவற்குழி, (4 ஆம் பக்கம் பார்க்க)

## நிபந்தனையை ஏற்றாலே புலிகளுடன் பேச்சுவார்த்தை

## கொழும்பில் நகுலேஸ்வரன்

## பட்டம் பெறா ஆசிரியர் விபரம் திரட்டல்

(நல்லூர்)

பட்டம் பெறாத ஆசிரியர்களும் பட்டப்படிப்பைத் தொடரலாம். பாடசாலைகளில் கற்பித்தல் தொழிலை மேற்கொண்டிருக்கும் ஆசிரியர்களில் பட்டம்பெறாத ஆசிரியர்களுக்கு பட்டச் சான்றிதழ் பெறும் வரை கல்வி பெற வசதிகளைச் செய்துகொடுக்க கல்வி, உயர்கல்வி அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பான அறிவுறுத்தலை கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளர் அனைத்துப் பிரதேசக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கும் கடிதமூலம் தெரியப்படுத்தியுள்ளார்

இதற்கான வேலைகளை ஒழுங்குபடுத்தித் திட்டமிடுவதற்காக சம்பந்தப்பட்ட சகல ஆசிரியர்களினதும் விபரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு அவர் கோரியுள்ளார்.

பட்டச் சான்றிதழ் பெறாத அதிபர்களையும் ஆசிரியர்களின் எண்ணிக்கையில் சேர்க்குமாறு அறுவுறுத்தப்பட்டுள்ளது.

## கோடீஸ்வரர் பட்டியலில் புறூணை மன்னன் முதலிடம்

(நியூயோர்க்)

உலகிலேயே முதல் தரத்தில் பட்டியலிடப்பட்ட கோடீஸ்வரர்களின் பெயர்களை அமெரிக்க வர்த்தக சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

அவர்களின் பெயர் விபரம் வருமாறு.

★ புறூணை அரசர் சுல்த்தான் ஹாஜி ஹசனல் பல்சியா முஇசாடீன் வடஉல்லா. இவர் முப்பத்தியொரு பில்லியன் டொலர் உரிமையாளர்.

★ சாம்மூர் வால்ற்றன் இவர்பென்ரன்விலேஎன்ற குடும்பத்தைச் சேர்ந்தவர் இவருக்கு 21.1 பில்லியன் டொலர் பெறுமதியான சொத்து சொந்தமாய் உள்ளது.

★ சவுதி அரேபிய மன்னர் ஃபாட் பின்அப்துள்அசீஸ் அல் ஸ்வுட் இவர் 18 பில்லியன் டொலருக்கு சொந்தமானவர்.

★ அல்பேட் ரிச்மான், போல் ரிச்மான், ரால்வ் ரிச்மான் என்ற மூவர். இவர்கள்கனடா றொரன்ரோவைச்சேர்ந்தவர்கள்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலை வழக்கு ஒரே கோணத்தில் நடக்கிறது

வேலணை) ஆகியோரும் 'கட்டைக்காட்டுப் பகுதியில் 21-07-91 அன்று நடந்த நேரடி மோதலில் ★ யோகன் (கிட்ணர் உதயகுமார், பெரிய புல்லுமலை மட்டக்களப்பு) ★ கபூர் (தங்கவேல், நடேசன் பாரதிபுரம், கிளிநொச்சி) ★ அயூர்ஜன் (பொன்னுத்துரை மோகன், நாவற்குழி,

(4 ஆம் பக்கம் பார்க்க)

கொண்டிருந்த சிறிலங்கா அதிரடிப் படையினர் மீது திடீர் தாக்குதல் ஒன்று புலிகளால் மேற்கொள்ளப்பட் பலர் காயமடைந்தனர்.

இம் மோதலை ஊர்ஜிதப் படுத்திய சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் இம் பலர் உயிரிழந்ததாக சுயாதீன செய்திகள் தெரிவிக்கின்றன.

அவர்களின் பெயர் விபரம் வருமாறு.

★ புறூணை அரசர் சுல்த்தான் ஹாஜி ஹசனல் பல்சியா முஇசாடீன் வடஉல்லா. இவர் முப்பத்தியொரு பில்லியன் டொலர் உரிமையாளர்.

★ சாம்மூர் வால்ற்றன் இவர்பென்ரன்விலேஎன்ற அல் ஸ்வுட் இவர் 18 பில்லியன் டொலருக்கு சொந்தமானவர்.

★ அல்பேட் ரிச்மான், போல் ரிச்மான், ரால்வ் ரிச்மான் என்ற மூவர். இவர்கள்கனடா ரொரன்ரோவைச்சேர்ந்தவர்கள்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# நிபந்தனையை ஏற்றாலே புலிகளுடன் பேச்சுவார்த்தை

## - ரணில் விக்கிரமசிங்கா

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் விடுத்த பேச்சுவார்த்தைக்கான அழைப்பை அரசின் சார்பில் அமைச் சரவைப்பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்கா நிராகரித்து விட்டதாக வெரித்தாஸ் வானொலி நேற்றிரவு கூறியது அதில் மேலும் அரசின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு அரசின் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும் என்று அமைச்சர் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பில் நகுலேஸ்வரன் கைது

(கொழும்பு)

வடபகுதியைச் சேர்ந்த நகுலேஸ்வரன் என்ற இளைஞர் ஒருவர் சிறிலங்காப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உளவுப் பிரிவின் சிரேஷ்ட அங்கத்தவர் எனவும் கடந்த இரண்டுவருடங்களாக கொழும்பில் தங்கியிருந்து தாக்குதல் நடத்தப்பட வேண்டிய இடங்கள் பற்றிய வரைபடங்களைத் தயாரித்து அனுப்பினார்எனவும்பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பணியகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இவர் தற்போது தடுத்துவைக்கப் பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## மிதிவெடியில் சிக்கிய படை காலை இழந்தது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ரோந்து சென்றபோது வீதியில் புதைக்கப்பட்டிருந்த மிதி வெடியில் சிக்கியதில் இராணுவத்தினர் ஒருவர் தனது கால் ஒன்றை இழந்தார்.

கடந்த புதன்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் முறக்கொட்டாஞ்சேனை சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து சந்திவெளியை நோக்கி இராணுவம் ரோந்து சென்றது. இதன்போது பாதையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதி வெடி ஒன்று [வெடித்ததில் இராணுவத்தினர் ஒருவர் தனது காலை இழந்தார்,

## கோப்பாயில் மக்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி

(நமது நிருபர்)

ஆனைஇறவு முகாம் பகுதியில் நடைபெற்ற பல்வேறு மோதல் சம்பவங்களில் வீரமரணமடைந்த மாவீரர்களான கப்டன் சாரா (இமானுவல் ஜோன்சன், உவர்மலை, திருமலை) விமலசுந்தரம் (வீரசிங்கம் தெய்வநாயகம், தம்பலகாமம்), குமணன் (பரமகுமார் தியாகராஜா, திருமலை), தர்மன் (ராஜதுரை ரவீந்திரகுமார், கோப்பாய்) ஆகியோரின் புகழுடல்கள் நேற்று மக்கள் அஞ்சலிக்காக கோப்பாய் சர

(4ஆம் பக்கம் பார்க்க)

## பிறப்பு - இறப்பு விண்ணப்பங்கள் விநியோகம் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ள இறப்பு - பிறப்பு விண்ணப்பப்படிவங்கள் இதுவரை பொதுமக்களுக்கு செயலக கருமபீடத்தினூடாக விநியோகிக்கப்படவில்லையெனத் தெரியவந்துள்ளது.

பத்திரங்கள் கொண்டுவரப்பட்ட சமயம் ஊரடங்கு அமுலில் இருந்ததால் அதனைச் சாட்டி பத்திரங்கள் அப்பொழுது வழங்கப்படவில்லை.

ஊரடங்கு நீங்கிய பின்பும் பத்திரங்கள் மக்களுக்கு விநியோகிக்கப்படாமல் இருந்து வருவதால் பொதுமக்கள் வெளியில் விலைகொடுத்து வாங்க நேர்வதாகவும் தெரியவருகிறது.

அதேவேளை செயலக ஊழியர்கள் தமது உறவினர்கள், நண்பர்களுக்கு விண்ணப்பங்களை இரகசியமாக விநியோகிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏறத்தாழ நாலாயிரம் பத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## எழுத,படிக்க தெரிந்தோரை அதிகரிக்கத் திட்டம்

(கொழும்பு)

எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கையை இரண்டாயிரமாம் ஆண்டளவில் அதிகரிக்கும் திட்டமொன்றைக் கல்வி, உயர்கல்வி அமைச்சு ஆரம்பிக்கவுள்ளது.

நாட்டில் படிப்பறிவு இல்லாதவர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்காக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொண்டர் ஆசிரியர்களின் உதவியுடன் இந்தக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சென்னை; தி.மு.க. வெற்றி மனமாற்றத்தை காட்டுகிறது

### -அன்பழகன்

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலர் ப. அன்பழகன் நேற்று மாலையில் சென்னையில் இடைத் தேர்தல் முடிவுகளின் பின் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் சென்னை வெற்றி மக்களின் மன மாற்றத்தை எடுத்துக் காட்டுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## ராஜீவ் கொலை வழக்கு ஒரே கோணத்தில் நடக்கிறது

### முன்னாள் டி.ஜி.பி குற்றச்சாட்டு

(சென்னை)

ராஜீவ் கொலை வழக்கை விசாரணை செய்யும் சி பி ஐ. யின் சிறப்புப் புலனாய்வுக் குழு தன்னுடைய விசாரணையை ஒரே கோணத்தில் மட்டும் நடத்துகின்றது என ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரியான டி ஜி பி. மோகனதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்

ராஜீவ் கொலையின் பின்னணியில் புலிகளைத் தவிர வேறும் சில சக்திகள் இந்தியாவிற்கு வெளியிலோ, உள்ளேயோ இருக்கின்றன. அல்லது இரண்டும் சேர்ந்திருக்கலாம் என்று மத்திய உள்துறை அமைச்சர் தெரிவித்தார். அவர் ஐ. பி, ரோ ஆகியவற்றின் புலனாய்வின் அறிக்கையின்படிதான் அவ்வாறு கூறியிருக்க முடியும். அவ்வாறாயின் ஏன் சி. பி. ஐ. விசா

(4ஆம் பக்கம் பார்க்க)

## வர்மா ஆணைக்குழு காலவரம்பு நீடிப்பு

(டில்லி)

ராஜீவ்காந்தியின் கொலை பற்றி விசாரிக்கும் நீதிபதி வர்மா ஆணைக்குழுவின் காலவரம்பு நீடிக்கப்பட்டுள்ளது.

கொலைக்கு வழி செய்த பாதுகாப்புத் தொடர்பான குறைபாடுகளை விசாரிக்கும் பணியைப் பூர்த்தி செய்ய வர்மா ஆணைக்குழுவுக்கு காலவரம்பு நீடிப்பு தேவையாக இருப்பதாக உள்துறை அமைச்சு அறிவித்தல் ஒன்று கூறுகிறது. இதனால் காலவரம்பு இந்த வருட இறுதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே தமிழகப்பொலிசாரால் தேடப்பட்டு தற்கொலைசெய்து கொண்ட சிவராஜனின் நெருங்கிய சகா ஒருவர் திருச்சி மாவட்டத்திலுள்ள காட்டுப்பகுதி ஒன்றினருகே கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## அணிசேரா இயக்கத்தின் அடுத்த தலைமைப் பதவியை இந்தோனேசியா பெறும்

(ஜகாத்தா)

அணிசேரா இயக்கத்தின் அடுத்த தலைமைப்பதவியை இந்தோனேசியா பெற்றுக் கொள்ளும் எனத் தெரியவருகிறது. இது சம்பந்தமான மாநாடு அண்மையில் இடம் பெறவுள்ளது தலைமைப் பதவிக்கு போட்டியிடவிருந்த மற்றுமொரு நாடான நிக்கரகுவா அதிலிருந்து விலகிக் கொள்ளும் என்று இந்தோனேசியா வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார். இந்தியத் தூதுவர் ராய்ட்டர் ஸ்தாபனத்திற்கு தகவல் தருகையில் தமது நாடு இந்தோனேசியாவை ஆதரிக்கும் எனக் கூறியுள்ளார்.

## வரி விளம்பரம்

**O/L 90, 91 வாராந்த பயிற்சி மதிப்பீடு**
விஞ்ஞானம், கணிதம், ஆகிய பாடங்களுக்குரிய பகுதி I+II வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும், அதற்கு விடையளித்துத் தரும் பட்சத்தில் இலவசமாக விடையுடன் திருத்திக் கொடுக்கப்படும். BONDபுத்தக நிறுவனம். 58A, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
(B-2984)

**ஆண்டு - 5 (புலமைப்பரிசில்)**
(மாணவர்களைப் பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமான பயிற்சிப் பரீட்சை) தமிழ், கணிதம் பாடங்களுக்குரிய மாதிரி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும். அவற்றிற்கு விடையளித்துத் தரும் பட்சத்தில் இலவசமாக விடைகளுடன் திருத்திக் கொடுக்கப்படும்) BOND புத்தகநிறுவனம். 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(B-2983)

## 2ம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



சங்கத்தார்வயல் திரு. பொன்னுத்துரை
**முருகமூர்த்தி (ராசா)**

விதி: 28-01-1965 — சதி 26-08-1989

இரண்டு ஆண்டுகள் கரைந்தது எம்
இதயம் தீயிலே கருகுது
மகனே உன்முகம் பாராது எம்
மனங்களும் வெந்துதான் போகுது

கண்களோ கண்ணீரைக் கொட்டுது அதை
கணக்கிட்டால் கங்கையிலும் கூடுது
இதயத்தில் உன்முகம் தான் இருக்குது நாம்
இறக்கும்வரை உன்நினைவும் அழியாது.

செல்வபவனத்தின் சிறப்பது எம்
செல்வ மகன் நீயின்றி அழிந்தது
உன் உடன் பிறந்த சோதரரின் சிரிப்பது
உன் உயிர் பிரிந்த நாள் முதலாய் ஓய்ந்தது.

புலிப்படைக்கு உதவிகள் நீ செய்தது என்று
புதல்வனே உன்னை ஈப்பி கொன்றது
அந்த நரிப்படைக்கு நல்லவைகள் தெரியாது
உந்தன் நல்லகுணம் அவர்களுக்குப் புரியாது.

உன் தம்பியும் உன்பிரிவைத் தாங்காது
உடன்புலியோடு இணைந்து கொண்டான் உனை நினைத்த
தங்கத் தமிழீழம் மலரும் நேரமிது எம்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**வீரவேங்கை அனந்தன்**
**(கந்தசாமித்துரை ராஜவேல்)**

அர்த்தமுள்ள தோற்றம் 11-06-70 — அர்த்தமுள்ளமறைவு 27-07-91

வீட்டில் இளையவனாய் விளையாடித்
திரிந்தவனே
நாட்டின் பணிமுடிக்க நயமுடன் சென்ற
உனை
நினைக்கும் போதெல்லாம் நெஞ்சிங்கே
நனைகிறது - நீ
களத்தில் காட்டிய வீரத்தின் கதை கேட்டு
கண்மணியே! நம் கண்கள் கண்ணீரை
மறந்தனவே
மண்மாதா மடிதனிலே மலராகிப்
போனவனே
கண்மலர் தூவிக் காலடியில் செய்கின்றோம்
அஞ்சலிகள்

26-8-91 இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரி

## 90-ம் நாள் நினைவஞ்சலி

வீர உதயம் 14-09-1960



வீர சொர்க்கம் 30-05-1991

**மேஜர் சுருளி**
**(கந்தசாமி சிறிதரன்)**

சுருளியெனும்இந்த மாவீரன் இன்னுயிர்
சுகம்பெறுந்'துதி' சொல்லிடவா?
திரட்டு திரட்டொரு வேங்கைகள் மாபடை!
சிங்களச் சேனைமேல் பாய்ந்தடிப்பாய்!
விரட்டு விரட்டிந்த மண்ணைவிட் டோட்டிடு!
வெற்றிப் புலிக்கொடி நாட்டிவிடு!
சிரித்துக் களித்திடும் தியாகி சுருளியின்
சீவன்! இதைப்புரி ஈழவனே!

சுதுமலை வடக்கு — அம்மா, அப்பா, சகோதரர் உற்றார், உறவினர், நண்பர்கள்

(B/3006)

## நினைவு கூருகின்றோம்..
## 1991-08-26

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரமரணமெய்திய
❋ மரைக்கார் (கு. தர்மராசா-பேசாலை, மன்னார்)
1986 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது சயனைற் உட்கொண்டு வீரமரண மெய்திய
2ஆம் லெப். சுந்தரம் (தம்பிப்பிள்ளை அருள்ராஜா - களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு)
1987 ஆம் ஆண்டு மன்னார், நானாட்டான்

கணக்கிட்டால் கங்கையிலும் கூடுது
இதயத்தில் உன்முகம் தான் இருக்குது நாம்
இறக்கும்வரை உன்நினைவும் அழியாது.

செல்வபவனத்தின் சிறப்பது எம்
செல்வ மகன் நீயின்றி அழிந்தது
உன் உடன் பிறந்த சோதரரின் சிரிப்பது
உன் உயிர் பிரிந்த நாள் முதலாய் ஒய்ந்தது.

புலிப்படைக்கு உதவிகள் நீ செய்தது என்று
புதல்வனே உன்னை ஈப்பி கொன்றது
அந்த நரிப்படைக்கு நல்லவைகள் தெரியாது
உந்தன் நல்லகுணம் அவர்களுக்குப் புரியாது.

உன் தம்பியும் உன்பிரிவைத் தாங்காது
உடன் புலியோடு இணைந்து கொண்டான் உனை நினைத்த
தங்கத் தமிழீழம் மலரும் நேரமிது எம்
தங்கமகன் உன்மனமும் மலரும் தப்பாது
கண்மணியே உன் ஆத்ம சாந்திக்காக எம்
கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

''செல்வ பவனம்'' சதா உன்னை எண்ணி இரத்
சங்கத்தார்வயல், தக்கண்ணீர் வடிக்கும்:
இயக்கச்சி. அன்பு அம்மா, ஐயா. அருமை அக்கா
மார், பாசமிகு தம்பிமார், ஆசை
மருமக்கள்மார், அத்தான் மற்றும்
(R-1659) உற்றார், உறவினர், நண்பர்கள்

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



**வீரவேங்கை**
**இல்பேட்**
**(ஞானராசா**
**ஞானதிபன்)**

வீரஜனனம் 27-1-1976

வீரமரணம் 27-7-1991

நீ பதித்த சுவடுகள்
இந்த மண்ணினைக் காக்கும்
காவலரண்கள்
விடியலுக்கு முந்திய பூபாளமாக
உன் கருவிகள் இன்னமும்
முழங்கிக் கொண்டிருக்கின்றன.

இலுப்பைக்கடவை
கள்ளியடி மன்னார், (B/2997) குடும்பத்தினர்
உற்றார், உறவினர்

---

அர்த்தமுள்ள தோற்றம் அர்த்தமுள்ள மறைவு
11 - 06 - 70 27 - 07 - 91

**வீட்டில் இளையவனாய் விளையாடித்**
**திரிந்தவனே**
**நாட்டின் பணிமுடிக்க நயமுடன் சென்ற**
**உனை**
**நினைக்கும் போதெல்லாம் நெஞ்சிங்கே**
**நனைகிறது - நீ**
**களத்தில் காட்டிய வீரத்தின் கதை கேட்டு**
**கண்மணியே! நம் கண்கள் கண்ணீரை**
**மறந்தனவே**
**மண்மாதா மடிதனிலே மலராகிப்**
**போனவனே**
**கண்மலர் தூவிக் காலடியில் செய்கின்றோம்**
**அஞ்சலிகள்**

26-8-91 இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வேம்படி ஒழுங்கை, இங்ஙனம்,
வல்வெட்டித்துறை. ராஜாவின் குடும்பத்தினர்
(R-1675)

---

# 45-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
28 - 05 - 1967



மறைவு
14 - 07 - 1991

## லெப். கேணல் சூட்டி
### (இராசு செல்வேந்திரன்)

கட்டைக்காட்டில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த லெப். கேணல் சூட்டியின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட போராளிகளுக்கும் எமக்கு ஆறுதல் கூறிய உறவினர்கள் நண்பர்களுக்கும் பல வழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் வழங்கியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கெருடாவில்
சாவகச்சேரி (B-3007) குடும்பத்தினர்

---

# நினைவு கூருகின்றோம்..
## 1991 - 08 - 26

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரமரணமெய்திய
❋ மரைக்கார் (கு. தர்மராசா-பேசாலை, மன்னார்)

1986 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைற் உட்கொண்டு வீரமரணமெய்திய
2ஆம் லெப். சுந்தரம் (தம்பிப்பிள்ளை அருள்ராஜா - களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு)

1987 ஆம் ஆண்டு மன்னார், நானாட்டான் பகுதியில் தேசவிரோதிகளுடனான மோதலில் வீரமரணமெய்திய
இல்மன் (செல்வகுமார்-பாலக்குழி, திருக்கோணமலை)
றஞ்சன் (இம்மானுவல் றஞ்சன் - பிச்சைக்குளம்)
அர்ச்சுனா (சகாயம் - கள்ளிக்கட்டைக்காடு)

அம்பாறையில் சிங்களக் காடையர்களினால் அடித்துக் கொல்லப்பட்ட தமிழ் விவசாயி

1989 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய
நிக்கலஸ் (சிறீகுகன் - மட்டக்களப்பு)

இதே ஆண்டு வீரமரணமெய்திய
❋ ரவி (பிரகாஷ்)

திருக்கோணமலையில் தேசவிரோதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரமரணமெய்திய
❋ பிரபா (தியாகராசன் செல்வகுமார் - திருக்கோணமலை)
❋ சங்கர் (அரசு நோயல் சைமன்-திருக்கோணமலை)

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் தரையிறங்க முற்பட்ட சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய
பைரவி (சங்கரப்பிள்ளை பார்த்தீபன் - 3 ஆம் குறிச்சி, மண்டூர், மட்டக்களப்பு)
தங்கத்துரை (சந்தசாமி செல்வராசா - 'இரத்தினபுரி' வங்காலை, மன்னார்)
அருளப்பு (சுப்பிரமணியம் ஜெயரட்ணம் - கரவெட்டி மேற்கு)
முகுந்தன் (குணசேகரம் யோகராசா - 5ஆம் வட்டாரம், நெடுந்தீவு)
பிரசாத் (சீவரத்தினம் சிறீகுமார் - 81, மானிப்பாய் வீதி, மானிப்பாய்)

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடிப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட 14 தமிழர்கள்

முல்லைத்தீவு, வற்றாப்பளைப் பகுதியில் சிறிலங்காப் படையினரின் உலங்கு வானூர்தி மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 2 தமிழ்ச் சிறுவர்கள்

வேலணை மேற்கில் சிறிலங்காப் படையினரின் உலங்கு வானூர்தி மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

❋ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**
(B/3008)

சிந்தனைக்கு

செயல் மறக்கப்படலாம்; ஆனால்,
அதன் விளைவு தொடர்கிறது.

-ஒவிட்.

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 26-08-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 023-2839 நிர்வாகபீடம் 5208
[illegible]

# 74 வருட ஆட்சிக்கு முற்றுப்புள்ளி

சோவியத்யூனியனில் எழுபத்திநான்கு வருடங்களாக ஆட்சியில் இருந்த கம்யூனிஸ்ட் கட்சி கலைக்கப்பட்டுவிட்டது இதன் மூலம் கட்சியின் பொதுக் குழு கலைக்கப்பட்டதோடு கட்சியின் சகல சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. சோவியத்யூனியன் உள்துறை அமைச்சிலும் பாதுகாப்புப் படையிலும், உளவு நிறுவனமான கே ஜி. பியிலும் கம்யூனிஸ்ட் கட்சியின் நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டுள்ளன. எழுபத்தி நான்கு வருடங்களாக இயங்கி வந்த கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரபூர்வ ஏடான ப்ராவ்டாவும் தடை செய்யப்பட்டுள்ளது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மரணம் எதிர் பார்க்கப்பட்டதுதான். கொர்பசேவின் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஏற்பட்ட நிலை இதனைத் தெளிவாக உணர்த்தியிருந்தன. அத்தோடு சோவியத்யூனியனில் நடந்த தேர்தல்களில் கம்யூனிஸ்ட் கட்சிக்குக் கிடைத்த தோல்விகளும், நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக நடந்த போராட்டங்களும் அதனை உணர்த்துப வயாக இருந்தன.

ஆனால் தற்பொழுது ஏற்பட்டது போல் ஓர் அவலமான திடீர் முடிவு சோவியத்யூனியனில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஏற்படும் என எதிர்பார்க்கவில்லை. ஆனால், கம்யூனிஸ்ட் கட்சி பழைமைவாதிகளின் சதிப்புரட்சியே மரணப்படுக்கையில் இருந்த அந்தக் கட்சியின் உயிர் பிரிவதற்கு உடன் காரணமாயிற்று என்பதும் மறுப்பதற்கில்லை.

சோவியத்யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சியின் கலைப்பு/மரணம் சோவியத்யூனியனைப் பொறுத்தோ அன்றி உலகைப் பொறுத்தோ ஒரு சாதாரண விடயமல்ல. உலகைப் பொறுத்து வாதப்பிரதிவாதங்களுக்கு மத்தியிலும் ஒரு பெரும் அரசியற் சித்தாந்தத்தைப் பேணும் தலைமைப் பீடமாக சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி இருந்து வந்தது. சோவியத்தில் [illegible]

# சுதந்திரப் பிரகடனத்தில் லித்வேனியா உறுதி

(மொஸ்கோ)

பால்டிக் குடியரசுகளில் ஒன்றான லித்வேனியா தான் செய்த சுதந்திரப் பிரகடனத்தை உறுதி செய்துள்ளது.

சுதந்திரத்தை உறுதி செய்வதற்கு ஏதுவாக பல புதிய நடவடிக்கைகளை லித்வேனியக் குடியரசு அறிவித்துள்ளது

லித்வேனியாவின் மேலைத் தேச எல்லைகளை பாதுகாக்கவும், இன்று முதல் விஸாக்களை வழங்கவும் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

## பாராளுமன்ற குழு
# தலைவர் பதவியை வி. பி. சிங் இராஜினாமா

(டில்லி)

ஜனதா தள பாராளுமன்ற தலைமைப் பதவியில் இருந்து வி. பி சிங் விலகியுள்ளார்

நேற்று முன் தினம் இதனை அறிவித்த வி. பி சிங் ''தலைவர்களாக கட்சி நிர்ணயித்த உத்தேச மேல் வரம்புக்குமேலே தனது வருமானமும் சொத்தும் உள்ளன என்றகாரணத்திற்காக பதவி விலகியதாக'' தெரிவித்தார்.

பொருளாதார நிபந்தனையை பூர்த்தி செய்யும் பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த ஒருவரை பாராளுமன்ற கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும்; கட்சியின் உத்தேச வரம்பிற்குள் வராத எல்லா உறுப்பினர்களும் கட்சிப்பதவிப் பொறுப்புக்களிலிருந்து விலகவேண்டும் என்று அஜித் சிங் ஒரு கடிதத்தில்விடுத்த யோசனையை அடுத்து இந்த பதவி விலகல் இடம் பெற்றது என்று தெரிவிக்கப்படுகிறது,

## சிம்லா உடன்படிக்கை மூலம்
# காஷ்மீர் பிரச்சினை தீர்க்க பாகிஸ்தான் விருப்பம்

(இஸ்லாமாபாத்)

இந்தியாவுடனான பிரச்சினைகள் சிம்லா உடன்படிக்கையின் பிரகாரம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதையே தான் விரும்புவதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய பாகிஸ்தானிய பிரதம மந்திரி அலுவலக உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்க வார இதழ் ஒன்றுக்கு பாகிஸ்தானிய பிரதம மந்திரி நவாப் ஷெரீப் அண்மையில் அளித்துள்ள பேட்டியொன்றில் காஷ்மீர் பற்றிய கருத்துக்கள் இந்தியாவிற்கு எதிராக போர் எச்சரிக்கை விடுக்கும் அர்த்தத்தில் கூறப்படவில்லையென்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதே நேரம் இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் இது பற்றித் தெரிவிக்கையில் ''இந்தியாவுடன் தனது உறவுகளை மேம்படுத்த பாகிஸ்தான் விரும்பினால் பஞ்சாப் காஷ்மீர்ப் பகுதிகளில் இடம் பெறும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உதவியளிப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று'' குறிப்பிட்டார்.

## அ. தி. மு. க., தி. மு. க,
# தலா இரண்டு இடங்களில்

# விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடத்தும் மாவீரர் தினப் போட்டிகள்

21-11-91 தொடக்கம் 27-11-91 வரையில் நடைபெற இருக்கும் மாவீரர் தினத்தை ஒட்டி நடாத்தப்பட இருக்கும் கலைகலாசாரப் போட்டிகளில் எழுத்தாளர்கள் கலைஞர்கள் மற்றும் இத்துறையில் ஆர்வம் மிக்கோர் மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இப்போட்டிகள் கீழ்க்காணும் விடயங்களில் நடைபெற உள்ளன.

1. கட்டுரை 2. நாவல் 3 சிறுகதை
4. கவிதை 5. சுவரொட்டி

இவற்றை ஆக்க விரும்புவோர் ஆக்கங்களை 25-10-91 க்கு முன்பு எமது பிரதேச மாவட்ட காரியாலயங்களிலும் அல்லது பத்திரிகைக் காரியாலயங்களில் ஒப்படைக்கும்படி வேண்டுகின்றோம்.

★ போட்டிகள் அனைத்தும் மாணவர்களுக்கு வேறாகவும் மற்றையோருக்கு வேறாகவும் இரு பிரிவுகளாக நடைபெறும்.

★ தமிழீழத்தின் அதியுயர் கௌரவமிக்க பரிசுகள் வழங்கப்படவுள்ள இப்போட்டிகளில் ஆர்வம் ஆற்றல்மிக்க அனைவரும் கலந்து கொள்ளலாம்.

## போட்டிகளுக்கான விதிமுறைகள்

தமிழீழ மக்கள் அனைவரும் கலந்து கொள்ளக் கூடிய இப்போட்டிகளில் படைப்புக்கள் யாவும் தமிழீழ விடுதலைப்போரை அடிப்படையாகக் கொண்டும் அதனை முன்னெடுத்துச் செல்லும் கருத்துக்கள் செறிந்ததாகவும் சமகாலத்தில் எமது மக்களின் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்ட யதார்த்த தன்மை மிக்கதாகவும் இருத்தல் அவசியம். மண் மீட்புப் போரில் இன்னுயிர் ஈந்த மாவீரர்களின் உணர்வுகளையும் இதயதாகத்தையும் பிரதிபலிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அதே போல் சுவரொட்டிகளின் கருப்பொருள்கள் மேற்குறிப்பிட்ட தன்மை மிக்கதாகவே இருத்தல் நன்று. இலக்கியப் படைப்புக்கள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டோ அல்லது தட்டச்சு செய்யப்பட்டோ ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்பப்படவேண்டும்.

சிறுகதைகள் 10 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் நாவல்கள் 100 பக்கங்களுக்குக் குறையாமலும் கவிதைகள் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். [illegible]

யாக இருந்தன.

ஆனால் தற்பொழுது ஏற்பட்டது போல் ஓர் அவல மான திடீர் முடிவு சோவியத்யூனியனில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஏற்படும் என எதிர்பார்க்கவில்லை. ஆனால், கம்யூனிஸ்ட் கட்சி பழமைவாதிகளின் சதிப்புரட்சியே மரணப்படுக்கையில் இருந்த அந்தக் கட்சியின் உயிர் பிரிவதற்கு உடன் காரணமாயிற்று என்பதும் மறுப்பதற் கில்லை.

சோவியத்யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சியின் கலைப்பு/ மரணம் சோவியத்யூனியனைப் பொறுத்தோ அன்றி உலகைப் பொறுத்தோ ஒரு சாதாரண விடயமல்ல. உலகைப் பொறுத்து வாதப்பிரதிவாதங்களுக்கு மத்தியிலும் ஒரு பெரும் அரசியற் சித்தாந்தத்தைப் பேணும் தலைமைப் பீடமாக சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி இருந்து வந்தது. சோவியத்தில் உருவான கம்யூனிச ஆட்சி ஒன்றைக் காட்டியே முதலாளித்துவ உலகம் தனது எழுபத்தைந்து வருட உலக அரசியலை நடத்தியது.

சோவியத்யூனியனைப் பொறுத்து அதன் பல்வேறு அம்சங்களிலும் கம்யூனிஸ்ட் கட்சி இடம் பெற்று/ஊடுருவி இருந்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதிக்கம் ஒன்றே சோவியத்யூனியனில் உள்ளபல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட பதினைந்து குடியரசுகளையும் ஒன்றாக இருக்குமாறு கட்டாயப்படுத்தும் ஒரே அம்சமாகவும் இருந்து வந்தது.

இந்த நிலையில் சோவியத்யூனியனில் நிகழ்ந்துள்ள கம்யூனிஸ்ட் கட்சிக் கலைப்பானது சோவியத்யூனியனில் ஒரு பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதில் சந்தேகமில்லை. கம்யூனிஸ்ட் கட்சி சோவியத்யூனியனில் வகித்த பெரும் பாத்திரத்தை தற்பொழுது அங்கு வகிக்க எந்தவொரு அமைப்பும் இல்லை.

சோவியத்யூனியனின் நிறைவேற்று அதிபராக இருக்கும் கொர்பசேவ் என்று சட்டம் தவிர்ந்த எந்தவித தளமு மற்ற அதிபராக உள்ளார். அதேவேளை இன்று சோவியத் அதிபர் கொர்ப்பசேவை கட்டுப்படுத்துவதுபோன்று செயற்படும் ரஷ்யக் குடியரசின் ஜனாதிபதி பொரிஸ் யெல்சின் சோவியத் குடியரசுகளின் ஜனாதிபதியல்ல. அவரின் அதிகாரம் ரஷ்யக் குடியரசிற்குள் மட்டுமே.

சோவியத்யூனியனின் எல்லைகள் ரஷ்யக் குடியரசின் பலத்தினையும் அதிகாரத்தைப் பொறுத்துமே சுருங்கியும் விரிந்தும் வந்துள்ளது. ஆனால் இன்று பெரும் குழப்பத்திற்கு உள்ளாகியிருக்கும் சோவியத்யூனியனில் ரஷ்யக் குடியரசின் பங்கும் பணியும் எந்தளவிற்குச் செல்லும் என்பதே கேள்விக்குரியது.

பால்டிக்குடியரசுகள் மூன்று, ஜோர்ஜியா, உக்ரெய்ன் உட்படஏழுகுடியரசுகள் தற்பொழுது சுதந்திரப்பிரகடனம் செய்துள்ளன. தனியான இராணுவம் அமைப்பதற்கு அவை திட்டமிட்டு வருவதாகத் தெரிகின்றது. அத்தோடு, சில உலகநாடுகள் பால்டிக் குடியரசுகளை அங்கீகரிப்பதற்கும் தயாராகி வருகின்றன.

இந்த நிலையில் சோவியத்கம்யூனிஸ்ட் கட்சியின் அஸ்தமனம் சோவியத் யூனியனின் அஸ்தமனமாகவும், மாறிவிடும் நிலை உருவாகியுள்ளது. 'கம்யூனிச லட்சியங்கள், உழைக்கும் வர்க்கத்தின் ஒற்றுமை, இவைதான் வேறுபட்ட இனங்களை ஒன்று சேர்க்கும்' என்ற லெனினுடைய கனவில் எங்கோ தவறு நிகழ்ந்து விட்டது. இந்தத் தவறு லெனின் வழி வந்தவர்களால் விடப்பட்டது என்பதை தற்பொழுது ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

மாபாத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய பாகிஸ்தானிய பிரதம மந்திரி அலுவலக உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்க வார இதழ் ஒன்றுக்கு பாகிஸ்தானிய பிரதம மந்திரி நவாப் ஷெரீப் அண்மையில் அளித்துள்ள பேட்டியொன்றில் காஷ்மீர் பற்றிய இது பற்றித் தெரிவிக்கையில் "இந்தியாவுடன் தனது உறவுகளை மேம்படுத்த பாகிஸ்தான் விரும்பினால் பஞ்சாப் காஷ்மீர்ப் பகுதிகளில் இடம் பெறும் 'பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உதவியளிப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று" குறிப்பிட்டார்.

## அ. தி. மு. க., தி. மு. க,

# தலா இரண்டு இடங்களில் வெற்றி பெற்றுள்ளன

(சென்னை)

தமிழகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற நான்கு இடங்களுக்கான இடைக்கால சட்டப் பேரவைத் தேர்தல்களில் இரண்டு இடங்களில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இரண்டு இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகமும் வெற்றி பெற்றுள்ளன.

சென்னைத் துறைமுகம் எழும்பூர்த் தனித் தொகுதிகளில் தி.மு.க. வேட்பாளர்களும் காங்கேயம், முசிறியில் அ.தி.மு.கவும் முன்னணியில் உள்ளது.

காங்கேயம் தொகுதியில் தமிழக கல்வி அமைச்சர் ஆர். எம். வீரப்பன் 45,000 கூடுதல் வாக்குகளைப் பெற்றும் முசிறியில் அ.தி.மு.க வேட்பாளர் பிறின்ஸ் தங்கவேல் 3500 வாக்குகள் கூடுதல் பெற்று முன்னணியில் உள்ளார்.

சென்னை துறைமுகம் தொகுதியில் தி.மு.க வேட்பாளர் செல்வராஜன் 2700 வாக்குகள் அதிகமாகவும் எழும்பூர்த் தனித் தொகுதியில் பருதி இளம் வழுதி 400 வாக்குகள் அதிகமாகவும் பெற்று முன்னணியில் உள்ளனர்.

## 'சென்மேரிஸ்' வெற்றி பெற்றது

யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், அமரர் குமரையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக நடாத்தும், தவிர்த்தல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியின் 'ஏ' பிரிவு அரை இறுதிப் போட்டியில் நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழக அணி, அதனை எதிர்த்து மோதிய குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக அணியை ஒன்றுக்கு பூச்சியம் என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

நேற்று முன்தினம் சென் அந்தனீஸ் விளையாட்டரங்கில் இடம்பெற்ற இப்போட்டியில், போட்டி ஆரம்பமான நேரம் தொடக்கம் இறுதி நேரம் வரை கணிசமான நேரம் சென் மேரிஸ் அணியினரின் கோல்பரப்புக்குள்ளேயே பந்து இருந்தபோதிலும், பாடுமீன் அணியினரால் ஒரு கோலைத் தானும் போட முடியவில்லை அதே சமயம் 81 வது நிமிடத்தில் கிடைத்த பெனால்டிக் உதை மூலம் ஒரு கோலைப்பெற்று சென்மேரிஸ் அணியினர் தமது வெற்றியை நிச்சயப் படுத்திக் கொண்டனர்.

## கருத்தரங்கு

(ஈச்சமோட்டை)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் போர்க்கால கருத்தரங்கு கூட்டம் இன்று திங்கட்கிழமை இரவு 8-00 மணிக்கு மணியம் தோட்ட சந்தியிலும். நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு கொழும்புத்துறை துறைமுக சந்தியிலும் நடைபெறும். இக்கருத்தரங்கிற்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள். இதனை தொடர்ந்து கலை,பண்பாட்டு கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (43)

சினையை அடிப்படையாகக் கொண்ட யதார்த்த தன்மை மிக்கதாகவும் இருத்தல் அவசியம். மண் மீட்புப் போரில் இன்னுயிர் ஈந்த மாவீரர்களின் உணர்வுகளையும் இதயதாகத்தையும் பிரதிபலிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அதே போல் சுவரொட்டிகளின் கருப்பொருள்கள் மேற்குறிப்பிட்ட தன்மை மிக்கதாகவே இருத்தல் நன்று. இலக்கியப் படைப்புக்கள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டோ அல்லது தட்டச்சு செய்யப்பட்டோ ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்பப்படவேண்டும்.

சிறுகதைகள் 10 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் நாவல்கள் 100 பக்கங்களுக்குக் குறையாமலும் கவிதைகள் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். சுவரொட்டிகள் யாவும் ஆட்போட்டில் 60 சென்ரீ மீற்றர் X 40 சென்ரீ மீற்றர் அளவு கொண்டதாக வண்ணப்படங்களாகவோ (எந்த வண்ணமும் உபயோகிக்கலாம்.) கறுப்பு வெள்ளைப் படங்களாகவோ வரைந்து அனுப்பலாம்.

போட்டியில் பங்குபற்றும் மாணவர்களது படைப்புக்கள் அவர்களது பாடசாலை அதிபர்களால் அல்லது வகுப்பு ஆசிரியர்களால் அவர்களுடைய சொந்தப் படைப்பு என உறுதிப்படுத்தப்பட வேண்டும் போட்டிக்கான கட்டுரைகள் 3000 – 5000 சொற்களுக்கு மேற்படாமல் இருத்தல் நன்று. போட்டிகளின் தீர்ப்பு தகுதி வாய்ந்த நடுவர் குழுவினால் எடுக்கப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

**மாணவர்களே!**

**போட்டிகள் பற்றிய சிறப்பு விதிகள்**

மாணவர்களுக்கான போட்டிகள் சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் ஆகிய விடயங்களில் நடைபெறும். இவை மேலே குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்டதாக இருக்கும். ஓவியங்கள் 18X12 அளவு கொண்டதாக இருக்க வேண்டும் கட்டுரைகள் கீழ் வரும் அம்சங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

1. விடுதலைப் போராட்டமும் மாணவர் பங்களிப்பும்
2. தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தி
3, தமிழீழ மாணவர்களது கல்வியின் எதிர்காலம்
4. இன்றைய சூழ்நிலையில் மாணவர்களது சமூகப் பணிகள்
5. போராடுவதற்காகக் கற்போம்.

மேற்கண்ட தலைப்புக்களில் கட்டுரைகள் 2,500 சொற்களுக்கு மேற்படாமல் வரைய வேண்டும். மாணவர்களுக்கான போட்டிகள் யாவும் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற் பிரிவு ஆகிய பிரிவுகளாக நடைபெறும்.

1 15 வயதுக்கு உட்பட்டோர் கீழ்ப் பிரிவு
2. 15 –17வயதுக்கு இடைப்பட்டோர் மத்திய பிரிவு
3. 17வயதுக்கு மேற்பட்டோர் மேற் பிரிவு

**ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனியாக பரிசுகள் வழங்கப்படும்**

# இன்று சிவகுமாரனின் பிறந்த தினம்



(நமது நிருபர்)

தியாகி சிவகுமாரனின் நாற்பத்தி இரண்டாவது பிறந்த தினம் இன்றாகும். அதனையொட்டி இன்றுகாலை ஏழு மணியளவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் உரும்பராயிலுள்ள தியாகி சிவகுமாரனின் சமாதியில் அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

# சேவையில் இருந்து ஓய்வு



(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் ஏ. ஜே. கனகரெட்ணா இன்று சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

புனிதபத்திரிசியார் கல்லூரியிலும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் தனது படிப்பை முடித்துவிட்டு முன்

# கிரெம்ளின் அதிகாரங்களை ரஷ்யக் குடியரசு அபகரிப்பு

(மொஸ்கோ)

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து கொர்ப்பச்சேவ் இராஜினாமாச் செய்திருப்பதைத் தொடர்ந்து கிரெம்ளின் அதிகாரங்கள் பலவற்றை எடுத்துக்கொள்ளும் உத்தரவுகளை ரஷ்யக் குடியரசுத் தலைவர்கள் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றனர். ரஷ்யப் பிரதமர் இவான் செலாயவ் புதிய யூனியன் அமைச்சரவை அமைக்கப்படும்வரை ரஷ்யப் பகுதி மீது இப்போதுள்ள சோவியத் அமைச்சரவைக்கு எந்தவித அதிகாரமும் இல்லையென அறிவித்துள்ளார்.

முக்கிய துறைகளான இயற்கை வளம் மற்றும் பொருளாதாரத் திட்ட அமைச்சகங்கள் ரஷ்யக் கட்டுப்பாட்டின் கீழ்கொண்டுவரப்பட்டுள்ளன.

சோவியத் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், புதிய அமைச்சரவையை உருவாக்கவும், பிரேரணைகளைக் கொண்டு வருவதற்காக, பிரதமர் செலாயவ் தலைமையிலான குழுவொன்றை கொர்ப்பச்சேவ் நியமித்துள்ளார். இக்குழுவில் மொஸ்கோ நகர துணை மேயரும், முற்போக்குவாத கம்யூனிஸ்ட்டுக்களும் இடம்பெற்றுள்ளனர்.

# கம்யூனிஸ்ட் கட்சி சோவியத்தில் கலைப்பு

(மொஸ்கோ)

சோவியத் யூனியனில் கம்யூனிஸ்ட் கட்சி கலைக்கப்பட்டுள்ளதாக சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவ் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சோவியத் தொலைக்காட்சி கொர்பச்சேவின் இந்த அறிவிப்பை வெளியிட்டது. கம்யூனிச கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்தும் அவர் விலகியுள்ளார் என அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

போல்ஸ்விக் புரட்சிக்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட கம்யூனிச கட்சியின் ஆட்சி 74 வருடங்களுக்குப் பின்னர் கொர்பச்சேவின் அறிவிப்பின் மூலம் முடிவுக்குக் கொண்டு வரப்படுகிறது.

இதேநேரம் கம்யூனிச கட்சியின் மத்திய நிர்வாகக்குழுவை கலைத்து விடவும் கொர்பச்சேவ் உத்தரவிட்டுள்ளார்.

இராணுவ கே. ஜி. பி. உள்துறை அமைச்சகம் ஆகியவற்றையும் கட்சியின் பிரிவுகளையும் கொர்பச்சேவ் தடை செய்துள்ளார்.

தோல்வியுற்ற திடீர் புரட்சியை அடுத்து சோவியத் கம்யூனிச கட்சி விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டு இருக்கையில் கொர்பச்சேவின் அறிவிப்பு இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கிரெம்ளின் கட்டுப்பாட்டில் இதுவரை இருந்த சகல தகவல் தொடர்புகளையும் ஏற்றுக் கொண்டுள்ளதாக ரஷ்யக் குடியரசின் பொரிஸ் எல்சின் அறிவித்துள்ளார்.

அத்துடன் எஸ்தோனியா குடியரசின் சுதந்திரத்தையும் அவர் அங்கீகரித்ததுடன், உலக சமுதாயத்தையும் அங்கீகரிக்கும்படி எல்சின் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இதற்கிடையில் இரண்டாவது சக்தி வாய்ந்த குடியரசான உக்ரெயின் சுதந்திரப் பிரகடனம் செய்துள்ளது

# பைலோ-ரஷ்யா பிரிவதற்கான முஸ்தீபு

(மொஸ்கோ)

பைலோ - ரஷ்யக் குடியரசு ஜனாதிபதி நிக்கோலாய் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். தோல்வியில்முடிந்த திடீர்ப்புரட்சியை அடக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள அவர் தவறிவிட்டார் என்று அவர் மீது கண்டனம் தெரிவிக்கப் பட்டது. இதனைத் தொடர்ந்தே அவர் பதவியை இராஜினாமாச் செய்தார்.

பைலோ - ரஷ்யப் பாராளுமன்றம் கூடி ரஷ்யாவிலிருந்து பிரிந்து போவது பற்றி ஆலோசனை கலக்கவுள்ளது.

# கம். கட்சியின் கலைப்புக்கு மேலை நாடுகள் ஆதரவு

சோவியத்தில் கம்யூனிஸ் கட்சிகள் கலைக்கப்பட்டதையும் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து கொர்பசேவ் விலகியதையும் ஆதரித்து மேலைநாடுகள் கருத்து வெளி

இது ஓர் முன்னேற்றத்தைக் குறிக்கிறது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கம்யூனிஸ்ட்கட்சிக்கு நியாயமான ஜனநாயக ரீதியிலான மாற்று ஒன்றைக் கண்டு கொள்ள இது தான் தருந்த

---

வீரவணக்கம்

கைதடி) ஆகியோரும்-

★ 27-07-91இல் சௌகான் (சிவானந்தன் ஜோய் அன்ரனி பண்டத்தரிப்பு) என்பவரும்-

★ ஆனையிறவில் 08-08-91ல் நடந்த நேரடி மோதலில் பசீர் (ஜெயராஜா சுனில் சிறுவிளான் இளவாலை என்பவரும்-

மட்டக்களப்பு கொக்குவில் என்னும் இடத்தில் நேற்று முன்தினம் சென்றுகொண்டி

# ஐரோப்பிய சமூகத்தின் அவசர மாநாடு

(லண்டன்)

சோவியத் யூனியனில் நடைபெறும் மாற்றங்கள் சம்பந்தமாக ஆராய ஐரோப்பிய சமூகத்தின் வெளியுறவு அமைச்சர்கள் எதிர்வரும் நாட்களில் அவசர மாநாடொன்றை நடத்தவுள்ளனர். டச்சு வெளி விவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் தகவல் தருகையில் பிரான்சின்வேண்டுகோளை யடுத்து இந்த அவசரக் கூட்டம் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

ஐ. நா. செயலாளர் பதவிக்கு

# இந்தோனேசியா அமைச்சர் போட்டி

(ஜாகர்தா)

இந்தோனேசியாவின் வெளிவிவகார அமைச்சர் அலி அம்பார் ஐக்கியநாடுகள் சபையின் பொதுச் செயலர்ளர் பதவிக்கு போட்டியிடவுள்ளதாக கூறியுள்ளார். வளைகுடாயுத்தம், சோவியத் யூனியனில் இடம்பெறும் சம்பவங்கள், சர்வதேச விவகாரங்கள் என்பவற்றின் அடிப்படையில் ஜாகர்தாவில் நடைபெறும் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாடு முக்கிய இடம்பெறும் என்றும் இந்தோனேசியா வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# மாலிடோவியக் குடியரசு ருமேனியாவுடன் இணையும்

(மொஸ்கோ)

சோவியத் குடியரசுகளில் ஒன்றான மாலிடோவியக் குடியரசு நாளை சுதந்திரப் பிரகடனம் செய்யவுள்ளது. அக்குடியரசின் நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் இதற்கான பிரகடனம் வெளியிடப்படுமென சபாநாயகர் அறிவித்துள்ளார் இது ருமேனியாவுடன் இணைவதற்கான முதற்கட்டமெனவும் கூறியுள்ளார். இங்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு தடை விதித்ததுடன் அதன் சொத்துக்களும் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளது.

# கே. ஜி. பி தலைமை அலுவலகத்திற்கு சீல்

(மொஸ்கோ)

மொஸ்கோவில் உள்ள கே.ஜி.பியின் தலைமையகம் மூடிச் சீல் வைக்கப்பட்டுள்ளது ரஷ்யக் குடியரசின் ஜனாதிபதி பொரிஸ் யெல்சின் விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அங்கு பறந்து கொண்டிருந்த கொடியும் இறக்கப்பட்டது.

கே ஜி. பியினர் முன்னர் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பான ஆவணங்களை தீவிரகம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் அழித்து விடுவார்கள் என்பதனாலேயே இந் நடவடிக்கை மேற் கொள்ளப் பட்டதாக பொரிஸ் யெல்சின் தெரிவித்துள்ளார்.

# மார்க்ஸ், லெனின் சிலைகள் அகற்றப்படுகின்றன



(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் ஏ. ஜே. கனகரெட்ணா இன்று சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

புனிதபத்திரிசியார் கல்லூரியிலும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் தனது படிப்பை முடித்துவிட்டு முன்னதாக யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் கற்பித்தல் தொழிலில் ஈடுபட்டார்.

இவர் பத்திரிகைத் தொழிலுக்கு ஈர்க்கப்பட்டு ஆங்கில, தமிழ் தினசரிகளிலும், சஞ்சிகைகளிலும் பணியாற்றியுள்ளார்.

குறிப்பிடத்தக்க பத்திரிகையாளராகவும் விமர்சகராகவும் பலருக்குத் தெரியப்பட்ட ஏ. ஜே 1976 இல் யாழ். பல்கலைக் கழகத்தில் ஆங்கில விரிவுரையாளராகச் சேர்ந்து கொண்டார்.

## பரீட்சை முடிவுகள்

இடம் பெயர்ந்த மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட பரீட்சைமுடிவுகள் வெளியிடப்பட்டுள்ளதாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை பெறுபேறுகளுக்குரிய மாணவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்திலும் பேராதனை பல்கலைக்கழகத்திலும் மானியங்கள் ஆணைக் குழு செயலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யின் மத்திய நிர்வாகக்குழுவை கலைத்து விடவும் கொர்பச்சேவ் உத்தரவிட்டுள்ளார்.

இராணுவ கே. ஜி. பி. உள்துறை அமைச்சகம் ஆகிய

...கொண்டிருக்கிறார்.

இதற்கிடையில் இரண்டாவது சக்தி வாய்ந்த குடியரசான உக்ரெயின் சுதந்திரப் பிரகடனம் செய்துள்ளது

## கம். கட்சியின் கலைப்புக்கு மேலை நாடுகள் ஆதரவு

சோவியத்தில் கம்யூனிஸ் கட்சிகள் கலைக்கப்பட்டதையும் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து கொர்பசேவ் விலகியதையும் ஆதரித்து மேலைநாடுகள் கருத்து வெளியிட்டுள்ளன.

அரசியல் பொருளாதார, சீர்திருத்த நடவடிக்கைகளில் இது ஓர் முன்னேற்றத்தைக் குறிக்கிறது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கம்யூனிஸ்ட்கட்சிக்கு நியாயமான ஜனநாயக ரீதியிலான மாற்று ஒன்றைக் கண்டு கொள்ள இது தான் தகுந்த தருணம் என பிரித்தானியாவும் தெரிவித்துள்ளது.

## சோவியத் முன்னாள்தளபதி நேற்றுத் தற்கொலை

(மொஸ்கோ)

சோவியத் யூனியனின் ஆயுதப் படைகளின் முன்னாள் தளபதி மார்ஷெல் அக்கிரோமிவ் நேற்றுத் தற்கொலை செய்து கொண்டார் அவர் கொர்ப்பசேவுக்கு ஆலோசகராக இருந்தார். கடந்த பத்து ஆண்டுகளில்அமெரிக்காவுடன் ஆயுத ஒப்பந்தங்களைப் பற்றிய பேச்சுவார்த்தைகளில் அக்கிரோமிவ் முக்கிய பங்கு வகித்தார்.

தற்கொலை பற்றிய செய்தியை வெளியிட்ட ஜனாதிபதி கொர்ப்பசேவின் பேச்சாளர் ஒருவர் விபரம் எதையும் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

முன்னாள் இராணுவத் தளபதி அக்கிரோமிவ் சோவியத் பாராளுமன்றத்தில் பழைமைவாதி என்றுபெயர் பெற்றவர் கொர்ப்பசேவுக்கு எதிரான திடீர்ப் புரட்சியில் அவருக்குச் சம்பந்தம் இருப்பதாகச் சான்று எதுவும் தம்மிடமில்லை என்று யெல்சின் சார்பில்ஒருஅதிகாரி தெரிவித்தார்

## சுப்றீம் சோவியத்தின் விசேட கூட்டம்

ரஷ்ய பாராளுமன்றத்தின் சுப்றீம் சோவியத் விசேட கூட்டம் இன்று கூடவுள்ளது. அரசாங்க அமைப்பிலும், அரசாங்க நிறுவனங்களிலும் மாற்றம் செய்வது பற்றிஇவ்விசேட கூட்டத்தில் தீர்மானிக்கப்படவுள்ளது.

### கோப்பாயில்

வணபவானந்தா பாடசாலையில் வைக்கப்பட்டன அங்கு நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்தில் ஆஞ்சநேயர், செல்வம், ரூபலதா ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள் அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு விதைகளில் விதைக்கப்பட்டனர்.

### எழுத படிக்க

குறிக்கோளை அடைவதற்காகத் தூர இடங்களிலுள்ள கிராமப் பகுதிகளில் 'வகுப்புகள் நடத்தப்படும். கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி கொழும்பு அக்கியூளாஸ் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

பிரிந்து போவது பற்றி ஆலோசனை கலக்கவுள்ளது.

### வீரவணக்கம்

கைதடி) ஆகியோரும்-

★ 27-07-91இல் சௌகான் (சிவானந்தன் ஜோய் அன்ரனி பண்டத்தரிப்பு) என்பவரும்-

★ ஆனையிறவில் 08-08-91ல் நடந்த நேரடி மோதலில் பசீர் (ஜெயராஜா சுனில் சிறுவிளான் இளவாலை என்பவரும்-

மட்டக்களப்பு கொக்குவில் என்னும் இடத்தில் நேற்றுமுன்தினம் சென்றுகொண்டிருந்த இராணுவமும் ரெலோவும் சேர்ந்து தாக்குதலை மேற்கொண்டதில் வீரவேங்கை

★ சுகந்தன் (நாகராசா யோகநாதன் கருவேப்பங்கேணி, மட்டக்களப்பு) என்பவரும் வீரமரணமடைந்தார்கள்.

★ கடந்த 23 ஆம் திகதி சுகயீனம் காரணமாக விடுதலைப் புலிகளைச் சேர்ந்த சுது (பிரகாசம் ரஞ்சன் ஊறணி, பொத்துவில்) இயற்கை மரணமெய்தினார். இவர்கள் அனைவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### விபுலாநந்தர்

பாட்டுக் கழகம் தீர்மானித்துள்ளதாக அதன் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

மேலும் இந்த விழாவினை முழுமையாகவும், நிறைவாகவும் கொண்டாட அவரின் வரலாறு தொடர்பான தகவல்கள், அவரது எழுத்துக்கள் (கடிதங்கள், கட்டுரைகள், நூல்கள்) என்பவற்றை ஒருங்கு சேர்க்க வேண்டிய இன்றியமையாத புலமைத் தேவை ஏற்பட்டுள்ளது. இத்தகைய ஆவணங்களை வைத்திருப்போர் அவற்றைத் தந்துதவுமாறு வேண்டுகின்றோம். தந்துதவுவோர்களின் பெயர்கள் உரியவகையில் நன்றியுடன் வெளிப்படுத்தப்படும். ஆவணங்களை நாம் படியெடுத்த பின்னர் உரியவர்களுக்கு மீளக் கையளிப்போம். இவ்வாறு தந்துதவுவோர் அடிகளார் பற்றிய அறிவார்ந்த அம்சங்களையும், பணிகளையும், தமிழ் கூறும் நல்லுலகம் பரவலாக அறிந்து கொள்ள உதவுகின்றனர் என்பதையும் அறியத்தருகின்றோம் எனவும் அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அலுவலகத்திற்கு சீல்

(மொஸ்கோ)

மொஸ்கோவில் உள்ள கே.ஜி.பி யின் தலைமையகம் மூடிச் சீல் வைக்கப்பட்டுள்ளது ரஷ்யக் குடியரசின் ஜனாதிபதி பொரிஸ் யெல்சின் விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அங்கு பறந்து கொண்டிருந்த கொடியும் இறக்கப்பட்டது.

கே ஜி. பியினர் முன்னர் மேற்கொண்டநடவடிக்கைகள் தொடர்பான ஆவணங்களை தீவிரகம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் அழித்து விடுவார்கள் என்பதனாலேயே இந் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டதாக பொரிஸ் யெல்சின் தெரிவித்துள்ளார்.

## மார்க்ஸ், லெனின் சிலைகள் அகற்றப்படுகின்றன

(மொஸ்கோ)

சோவியத் யூனியனின் பல பகுதிகளிலும் கம்யூனிஸ்ட் கட்சியின் கொடிகள் இறக்கப்பட்டும், கிழிக்கப்பட்டும், தீயிடப்பட்டும் வருகின்றன.

மேலும் கம்யூனிஸ்ட் கட்சிக் காலத்தில் வைக்கப்பட்ட லெனின், கார்ல் மார்க்ஸ் உட்பட ஏனைய கம்யூனிஸ சிந்தனையாளர், ஆட்சியாளர் ஆகியோரின் சிலைகளும் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன.

சோவியத் குடியரசுகளின், பிரதானசதுக்கங்களில்அமைக்கப்பட்டுள்ள இச்சிலைகளை பாரிய பாரம் தூக்கிகளின் (கிரெயின்)துணையுடன் கழுத்தில் சுருக்கிட்டு கீழ் இறக்கி லொறிகளில் ஏற்றப்படுவதை தொலைக்காட்சிகளில் காணக்கூடியதாக இருந்தது. இதனை பல மக்கள் பார்த்துக்கொண்டு நின்றனர்.

### ராஜீவ்

ரணையை விரிவுபடுத்தவில்லை என அவர் கேட்டுள்ளார்.

ராஜீவ் காந்தியின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள உலகத்தலைவர்களில் அரபாத்தும் வந்திருந்தார். முக்கியமான உலகத்தலைவர்கள் இருந்த பகுதியில் அரபாத்தோடு சந்திரா சுவாமியும், மாமாஜியும் உட்கார அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு அனுமதி கொடுத்தது யார்? ஏன் அனுமதி கொடுத்தார்கள் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

### விண்ணப்பங்கள்

திரங்கள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டு செயலகத்தில் வைக்கப்பட்டதாகவும்-

அவை இன்னமும் ஏன் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படவில்லை என்றும் பொதுமக்கள் மத்தியில் கேள்வி எழுந்துள்ளது. (21)

## தனியரசுகளாக அங்கீகாரம்

(மொஸ்கோ)

எஸ்தோனியா மற்றும் லட்வியாவின் சுதந்திரபபிரகடனத்தை தமது குடியரசு அங்கீகரிக்கும் என்று ரஷ்யக் குடியரசின் தலைவர் பொரிஸ் யெல்சின் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மூன்று பால்டிக் குடியரசுகளுடனும் ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள நோர்வேயும், டென்மார்க்கும் முடிவு செய்துள்ளன. இந்த இரு நாடுகளும் லித்துவேனியா, லத்வியா, எஸ்தோனியா ஆகிய மூன்று பால்டிக் குடியரசுகளுக்கும் அடுத்த சில நாட்களில் தூதுவர்களை நியமிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### கோடீஸ்வரர்

12.8 பில்லியன் டொலருக்குச் சொந்தக்காரர்கள்

★ சேர் பொரஸ்ட் மாஸ். இவர் நெவவேடாலொஸ் வேகாசைச் சேர்ந்தவர்.

★ ஜீனியர் பொரஸ்ட் மஸ்ம் ஜோன் மாஸிம் இவர்கள் வேஜீனாவை சேர்ந்தவர் ஜக்குலின் மாஸ்வோகங்நியூஜேசியை சேர்ந்தவர்இவர்களுடைய சொத்து 12.5 பில்லியன் டொலர்,

★ ஜீனியர் சாமுவல் நியூஹவுஸ், டொனால் நியூஹவுஸ் நியூயோர்க் குடும்பத்தவர்கள் இவர்களது சொத்து 12.1 பில்லியன் டொலர்.

உ

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஆதீனம்ஸ்தாபிக்கப்பட்ட 25 ஆவது ஆண்டு நிறைவுவிழா (பீடாரோஹண விழா) ஆவணி மீ கார்த்திகை நட்சத்திரம் (31.8.91) சனிக்கிழமை காலை முதல் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(R/1661)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.